**CC**.**No**.158/2024

**Date**: 14.05.2026

**ம.சா.** 1. கர்ணன், த/பெ. செல்லக்கண்ணு, இலுப்பக்குடி

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட். அலுவலகம் வைத்துள்ளேனா என்றால் காரைக்குடியில் சூடாமணிபுரத்தில் அலுலவம் உள்ளது. எதிரி ரூ.2 லட்சம் கடன் எங்கு வைத்து பெற்றார் என்ற விபரத்தை ம.சா.ஆ.3 அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி எவ்வாறு யார் மூலமாக அறிமுகம் ஆனார் என்றால் ரியல் எஸ்டேட் மூலமாக தெரியும். எதிரி வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறார் என்றாலும், வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு எத்தனை வருடங்களாக அறிமுகம் என்றால் சுமார் 3 1/2 வருடம், எதிரியின் கணவர் பெயர் என்னவென்றால் பழனியப்பன். பழனியப்பன் என்ன தொழில் செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கொடுத்ததாக கூறப்படும் புரோ நோட் யார் நிரப்பினார்கள் என்றால் எதிரி நிரப்பியபடி கொடுத்தார். எதிரி நிரப்பும்போது சாட்சிகள் இருந்தார்களா என்றால் இல்லை.**

**2) அசல் மற்றும் வட்டி தொகை எதிரியிடம் எப்போது எங்கு வைத்து கேட்டேன் என்றால் 3 மாதங்கள் வட்டி எதுவும் தரவில்லை, அதனால் 3 மாதங்கள் கழித்து எதிரியின் வீட்டில் வைத்து பணத்தை திருப்பி கேட்டேன். எதிரியின் வீட்டில் பணத்தை திருப்பி கேட்கும்போது எதிரி மட்டும்தான் இருந்தார். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரி வீட்டின் வாசலில் வந்துதான் என்னிடம் பேசினார். நான் தற்போதைய நீதிமன்றத்தில் எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் 4–5 வழக்குகள் உள்ளது. மொத்த வழக்குகளில் தொகை எவ்வளவு என்றால் சுமார் 6 லட்சம் இருக்கும். அனைத்து வழக்குகளிலும் வட்டிக்காக பணம்**

கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3) வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் இருந்து உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமார் 50 ஆயிரம் ஆகும். ஜேபிஆர் பைனான்ஸ் பாண்டியராஜன், ஆரோக்கியசாமி மற்றும் கணேசன் எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. கடன் தொடர்பாக லெட்ஜர் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. நான் பொதுவாக கடன் கொடுக்கும்போது அதற்கு ஆதரவாக ஆவணங்கள் பெற்றுக்கொள்வேன் என்றால் புரோநோட் பெற்றுக்கொள்வேன்.

4) எதிரி வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறார் என்றாலும், வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கு எந்த ஒரு வருமானமும் இல்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கொடுத்ததாக கூறப்படும் புரோநோட்டில் சாட்சிகள் யார் என்றால் தெரியவில்லை. எதிரிக்கு என்னை நேரடியாக யார் என்றே தெரியாது என்றாலும், எதிரி நான் கூறுவதுபோல் எந்த ஒரு புரோநோட்டும் எழுதித்தரவில்லை என்றாலும் சரியல்ல. புரோநோட்டை நீதிமன்றத்தில் சமர்பிக்க தயாரா இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எதிரி கொடுத்ததாக கூறப்படும் காசோலையை நான் நிரப்பினேனா என்றால் எதிரி நிரப்பியபடி காசோலையை வைத்திருந்தார் அதை எனது முன்பு கையொப்பம் செய்து எதிரி எனக்கு கொடுத்தார். எதிரி ஜேபிஆர் பைனான்சில் ரூ. 30 ஆயிரம் என அழகு , காந்தி ஆகியோர்களுக்கு கடனாக பெற்றுக்கொடுத்து அதற்கு செக்யூரிட்டிக்காக எதிரி ஜேபிஆர் பைனான்சிற்கு 3 காசோலைகளை கொடுத்து வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) ஜேபிஆர் பைனான்ஸ் பாண்டியராஜன், கணேசன், ஆரோக்கியசாமி ஆகியோர்கள் எனக்கு நண்பர்கள் என்பதால் எதிரியின் செக்யூரிட்டிக் காசோலையை என் மூலமாக எதிரி மீது 3 வழக்குகளாக பொய்யாக ஜேபிஆர் பைனான்ஸ் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையாக புரோநோட் பெற்றிருந்தால் அதில் சாட்சிகள்

கையொப்பம் பெற்றிருப்பேன் என்றாலும் புரோநோட் எதுவும் பெறாததால்தான் சாட்சிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு போதிய வருமானம் இல்லை என்றாலும், நான் கடனாக கொடுத்திருப்பது நம்பும்படி இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த ஒரு கடனும் பெறவில்லை என்றாலும் அதற்காக எதிரி எனக்கு எந்த ஒரு புரோநோட்டும் காசோலையும் கொடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த வகையான சட்டப்படியான கடனுக்காக எதிரி எனக்கு வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி money lenders உரிமம் பெறாமல் கடன் கொடுப்பது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. 3 வருடம் பழக்கம் இருந்தும் எதிரியை பற்றி போதிய விபரம் எனக்கு தெரியாமல் எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது நம்பும்வகையில் இல்லை என்றால் சரியல்ல. கடன் உண்மையாக கொடுத்திருந்தால் சாட்சிகள் முன்னிலையில் கொடுத்திருப்பேன் என்றாலும், சாட்சிகள் எதுவும் இல்லாததால் கடன் எதுவும் கொடுத்திருக்க வாய்பில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் இருந்து எதிரியை விடுவிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.14 17:26:28 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.